# மூதூர் பிரதேச சபை

# திருகோணமலை மாவட்டம்.

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூலை 27 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஒக்தோபர் 25 இல் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்ட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளின் மூலம் தெரிய வந்தவை மற்றும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, மூதூர் பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன், இவ்வறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூதூர் பிரதேச சபையின் செயலாற்றுகை தொடர்பான நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகளை உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைாபடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஏற்பாடுகள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 29,146,308 பெறுமதியான நிலையான சொத்துக்களுக்கான மாற்றீடு செய்வதற்கான ஏற்பாடுகள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்வேறு தரப்பினரிடமிருந்தும் நன்கொடையாகக் கிடைத்த வாகனம், உழவு இயந்திரம் - ரேலர், நீர்ப்பம்பி, இரண்டு சக்கர உழவு இயந்திரம், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பனவற்றின் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேலாக செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,450,986 ஆகும்.

### 1.3.3 வங்கிக் கணக்குகள்

வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களைப் பகுப்பாய்வு செய்து பின்வரும் கூற்றில் தரப்படுகின்றது.

| விபரங்கள் | | காலப்பகுப்பாய்வு | | | |
|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | 6 மாதங்களுக்கு மேல் 12 மாதங்களுக்குக் குறைவு | 1-3 வருடங்கள் | 3 வருடங்களுக்கு மேல் | மொத்தம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 1. தேறாத வைப்புக்கள் | 01 | - | - | 400 | 400 |
| 2. வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 42 | 6,150 | 166,718 | 126,267 | 299,135 |
| | | 6,150 | 166,718 | 126,267 | 299,535 |

### 1.3.4 தொங்கல் கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐயுறவுத் தன்மையான கணக்குகளில் ரூபா 16,574 தொகையான செலவு மீதிகள் உள்ளன.

### 1.3.5 கணக்கய்விற்கான சான்றுகளின்மை

#### (அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 96 கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத அதேவேளை அக்கணக்காய்வு ஐயவினாக்களுடன் தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பிடக் கூடிய பெறுமதி ரூபா 2,247,197 ஆகும்.

#### (ஆ) கணக்காய்விற்குத் தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

கணக்காய்விற்குச் அவசியமான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 778,780 பெறுமதியான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

### 1.3.6 இணங்காமைகைள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், போன்றவற்றுடனான தொடர்பு | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (ஆ) | 1989 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிகள் | |
| | (i) பகுதி II இன் 16(1) ஆம் பிரிவு | பிரதேச சபையானது அசையும் மற்றும் அசையாத சொத்துக்களுக்கான பதிவேட்டினைப் பேணியிருக்கவில்லை. |
| | (ii) அத்தியாயம் I இன் 5(xi) ஆம் பிரிவு | காசு, களஞ்சியம் என்பவற்றுடன் தொடர்பாக காப்புறுதி மேவுகை ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) அத்தியாயம் I இன் 5(xii) ஆம் பிரிவு | காசு, களஞ்சியம் போன்றவைகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து போதுமான அளவு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iv) | அத்தியாயம் VII இன் 10(159) ஆம் பிரிவு | மாதாந்த வருமானப் பகுப்பாய்வுக் கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | அத்தியாயம் VII இன் 4(153) ஆம் பிரிவு | நிலுவை வருமானக் கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | அத்தியாயம் VIII (3) | சபையின் வேலைகளும் சேவைகளும் பொதுப்போட்டியின்றி கையளிக்கப்பட்டிருந்தன. |

**(ஆ) மாகாண சபை நிதி விதிகள்** -

| | | |
|---|---|---|
| (i) | விதி இல. 345 | ரூபா 302,102 தொகையான சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | நிதிப்பிரமாணம் 1645 | வாகன ஓட்ட அட்டவணை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிகள் அதிகாரச் சட்டம் | நிறுவனங்களிருந்து ரூபா 5,200 தொகையான நிறுத்தி வைத்தல் வரிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,887,356 ஆக இருந்ததுடன், அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 860,579 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | 565 | 613 | 3,329 | 565 | 305 | 5,126 |
| (ii) | வாடகைகள் | 5,900 | 4,202 | 5,217 | 2,560 | 4,072 | 4,373 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 500 | 381 | 81 | 460 | 584 | 163 |
| (iv) | வேறு வருமானங்கள் | 22,540 | 22,030 | -- | 3,303 | 367 | -- |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணங்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 129(2)(அ) பிரிவின் ஏற்பாடுகளின் இணைப்பு அட்டவனை I இல் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் பல்வேறு கட்டளைகளின் கீழ் நீதவான் நீதி மன்றத்தில் இருந்து அறவிடப்படக் கூடிய தண்டப் பணங்களுக்கான பட்டியல்கள் நீதவான் நீதி மன்றங்களுக்கு சபையினால் அனுப்பபட்டிருக்கவில்லை. சபையானது பெற வேண்டிய நீதிமன்ற தண்டப் பணங்களை கணிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டு வந்திருக்கவில்லை.

### 2.2.3 முத்திரைக் கட்டணங்கள்

பதிவாளர் நாயகத்திடமிருந்து கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்டவை, உள்ளபடியான செலவினம் மற்றும் முரண்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| செலவின விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | முரண் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | முரண் |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| **மீண்டெழும் செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 22,223 | 21,106 | 1,117 | 20,874 | 19,587 | 1,287 |
| ஏனையவை | 4,799 | 3,171 | 1,628 | 4,204 | 2,844 | 1,360 |
| உப மொத்தம் | 27,022 | 24,277 | 2,745 | 25,078 | 22,431 | 2,647 |
| மூலதனச் செலவினம் | 2,475 | 3,053 | (578) | 4,878 | 4,878 | -- |
| முழு மொத்தம் | 29,497 | 27,330 | 2,167 | 29,956 | 27,309 | 2,647 |

## 2.4 மிகை விதிப்பு

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172(3) ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பானவர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட தண்ட அறவீட்டின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த மிகை விதிப்பின் பெறுமதி ரூபா 15,276 ஆகும்.

## 2.5 மனித வள முகாமைத்துவம்

### 2.5.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணியின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவிகளின் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது | பற்றாக்குறை/ மேலதிகம் |
|---|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 01 | - | 01 |
| இரண்டாம் நிலைதரங்கள் | 25 | 19 | 06 |
| ஆரம்ப தரங்கள் | 55 | 55 | -- |
| ஏனைய(அமைய, தற்காலிக) | - | 25 | (25) |
| மொத்தம் | 81 | 99 | (18) |

## 2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.6.1 பயன்பாடற்ற மற்றும் குறைபயன்பாட்டுடைய பௌதீக வளங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட பயன்பாடற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய பௌதீக வளங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | விடயங்கள் | விடயங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
|---|---|---|---|
| | | | ரூபா |
| (அ) | கதிரைகள் | 79 | காணப்படவில்லை |
| (ஆ) | நிழற்பட பிரதி இயந்திரம்- கனன் 2010 ஜே | 01 | |
| (இ) | நிழற்பட பிரதி இயந்திரம்- கனன் - என்பீ – 1225 | 01 | |
| (ஈ) | ரோணியோ இயந்திரம் - எச்ஆர்ஓ | 01 | |
| (உ) | குளிரூட்டி - எல்ஜீ | 01 | |
| (ஊ) | நிற அச்சிடும் இயந்திரம் - நிப்பன் | 01 | |
| (எ) | பதவி நிலைக் கதிரை | 01 | |
| (ஏ) | குசன் கதிரைகள் | 59 | |

### 2.6.2 கிடைக்க வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 891,303 ஆகக் காணப்பட்டது.

### 2.6.3 பெறவேண்டிய உத்தியோகத்தர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய உத்தியோகத்தர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,209,413 ஆக இருந்ததுடன் 1 ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருக்கின்ற மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 930,263 ஆகும்.

### 2.6.4 அசைவுறாத நடைமுறைச் சொத்துக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்கும் மேலான காலம் அசைவுறாது காணப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 48,587 ஆகும்.

### 2.6.5 மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாத சொத்துக்கள்

பௌதீக மெய்மையாய்வு / மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளின் மூலம் உறுதி செய்யப்படாத 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ஏட்டுப் பெறுமதியில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 4,443,627 ஆகும்.

### 2.7 வாகனப் பாவனை

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வாகனங்களின் சம்பவத்திரட்டுப் புத்தகம் முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நாளந்த ஓட்ட அட்டவணையில் பிரயாணம் மேற்கொள்ளப்பட்ட நோக்கங்கள் மற்றும் தூரங்கள் என்பன காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 இனங்காணப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள்

தெரிவுக் கணக்காய்வு மற்றும் சபையால் பேணப்பட்ட தகவல்களின்படி, ரூபா 3,674,902 பெறுமதியான இழப்புக்களும் சேதங்களும் வெளிப்பட்டது.

## 2.9 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) நிலையான சொத்துக்களின் மீதான கட்டுப்பாடு